KFA-I-M

## இரண்டாம் இடைப்பருவத் தேர்வு

தமிழ்

மதிப்பெண்: 50

வகுப்பு - நான்கு - ________

நேரம்: 2மணி

| | |
|---|---|
| பள்ளியின் பெயர்: ____________ | மாணவன்/மாணவி பெயர்: ____________ |
| இடம்: ____________ | வரிசை எண்: ____________ |

**I. அ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** 10 × 1 = 10

1. 'வியனுலகம்' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________
   அ) வியன் + உலகம் ஆ) வியல் + உலகம்
   இ) விய + உலகம் ஈ) வியன் + னுலகம்
2. 'நேர்த்தி' - இச்சொல்லுக்குரிய பொருள் ____________
   அ) தோற்றம் ஆ) பார்வை இ) சாட்சி ஈ) சரியான அமைப்பு
3. புத்திக் கூர்மையாக செயல்பட்டது யார்? ____________
   அ) சிங்கம் ஆ) முயல் இ) பென்குயின் ஈ) யானை
4. இயற்கை + உரம் - என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ____________
   அ) இயற்கையான உரம் ஆ) இயற்கை உரம்
   இ) இயற்கையுரம் ஈ) இயற்கையின் உரம்
5. 'இன்சொல்' - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________
   அ) இன் + சொல் ஆ) இனிமை + சொல்
   இ) இன்மை + சொல் ஈ) இனிய + சொல்
6. 'பிறகென்ன' இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ____________
   அ) பிற + கென்ன ஆ) பிறகெ + என்ன இ) பிறகு + என்ன ஈ) பிறர்க்கு + என்ன
7. சோளக்கொல்லைப் பொம்மை என்பது ____________
   அ) உயிருள்ள பொருள் ஆ) உயிரற்ற பொருள்
   இ) இயற்கையானது ஈ) மனிதன் செய்ய இயலாதது
8. 'பரம்பரை' - இச்சொல் குறிக்கும் பொருள் ____________
   அ) தலைமுறை ஆ) உறவுமுறை இ) சொந்தம் ஈ) உறவினர்
9. 'அதிர்கின்ற வளை' - இச்சொற்களில் அதிர்கின்ற என்னும் சொல்லின் பொருள் ____________
   அ) உடைகின்ற ஆ) ஒலிக்கின்ற இ) ஒளிர்கின்ற ஈ) வளைகின்ற
10. 'இன்னும் + ஒரு' - இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ____________
    அ) இன்னும்ஒரு ஆ) இன்னுமொரு இ) இன்னும்மொரு ஈ) இன்னமும்

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 4 × 1 = 4

11. வணிகர் ____________ நாட்டைச் சேர்ந்தவர்.
12. வியாபாரி, வணிகர் இருவரின் வழக்கை எதிர்கொண்டவர் ____________
13. திருமண ஊர்வலத்தில் ____________ இறந்து விட்டது.
14. ____________ கீழே விழுந்து நொறுங்கின.

**III. உணர்வுகளைப் பொருத்துக.** 5 × 1 = 5

15. அ) பள்ளிக்கு நேரமாயிற்று, கிளம்பி ஓடு - பாதுகாப்பு

ஆ) பாம்பு வருகிறதே! - கேளிக்கை

இ) வாழ்க வளமுடன் - அச்சம்

ஈ) கோமாளியின் நடனம் பார் - வாழ்த்து

உ) எழுதுகோலை பத்திரமாக பார்த்துக் கொள் - விரைவு

**IV. அகரவரிசைப்படுத்துக.** 10 × 1 = 10

16. சாரல், சைவம், சோகம், சீப்பு, செம்பருத்தி, சேவல், சொந்தம், சௌந்தர்யம், சந்து, சூடம், சுமை, சிறகு.

**V. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

17. பனிமலைக்கு எதற்காக விலங்குகள் சென்றன?

18. காவல்காரருக்குத் தோட்டத்தில் உள்ள பணி யாது?

19. உலகம் எப்போது மகிழும்? - நன்னெறிப்பாடல் மூலம் உணர்த்துக.

20. பாட்டி வைத்தியம் என்றால் என்ன?

21. யானைக்கும், பானைக்கும் சரி என்ற கதை உணர்த்தும் நீதி என்ன?

22. கடலின் அலைகள் எப்போது பொங்கி எழும்?

23. ராஜாவைப் போல் சோளக்கொல்லையின் நடுவே நின்றவர் யார்?

**VI. அ) சொற்களை முறைப்படுத்திச் சரியான தொடரமைத்து எழுதுக.** 4 × 1 = 4

24.

தற்செயலாக<br>இறந்து விட்டது<br>யானை<br>ஊர்வலத்தில்

விசித்திரமாக<br>எதிர்கொண்டார்<br>வழக்கை<br>மரியாதை<br>இராமன்

கீழே<br>பானைகள்<br>உடைந்து<br>விட்டன விழுந்து

வைக்கப்பட்டன<br>பானைகள்<br>கதவின்<br>பின்னால்<br>அடுக்கி

1. ______________________________
2. ______________________________
3. ______________________________
4. ______________________________
5. ______________________________

**ஆ) நிறுத்தற் குறியிடுக.** 3 × 1 = 3

25. ஆகா இந்த கிராமம் தான் எவ்வளவு அழகாக இருக்கிறது

26. நாட்டுப்புற மருத்துவம் என்றால் என்ன

27. பயறு நெல் காய் கனி போன்றவற்றை விளைவித்தல் விவசாயம் எனப்படும்

**VII. மனப்பாடப்பாடல்** 1 × 4 = 4

28. 'இன்சொலால்' எனத் தொடங்கும் நன்னெறி பாடலை அடிபிறழாமல் எழுதுக..